நூலுரிமைத் தொகை எதுவுமில்லாமல் கலைஞரின் நூல்கள் நாட்டுடைமை!

முதல்வரின் அறிவிப்பு - உலகத் தமிழ் மக்களைப் பரவசப்படுத்தியுள்ளது!

‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 13- தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் அவர்களின் படைப்புகள் நூலுரிமைத் தொகை எதுவுமின்றி நாட்டுடைமை ஆக்கப்படுகிறது எனும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களைப் பரவசப் படுத்தியுள்ளது என ‘தினத்தந்தி’ (12.9.2024) தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

திருக்குறள் கலைஞர் உரை, தொல்காப்பிய பூங்கா போன்ற அவர் எழுதிய உரை நூல்கள் எல்லோருடைய, குறிப்பாக தமிழ் அறிஞர்களின் போற்றுதலை பெற்றுள்ளது.

மறைந்தும் மறையாமல் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் அவர்களின் படைப்புகள் அனைத்தும், நூலுரிமைத் தொகை எதுவுமில்லாமல் நாட்டுடைமை ஆக்கப்படுகிறது என்ற நல்ல அறிவிப்பை முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டது, உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களை பரவசப்படுத்தியுள்ளது.

5 முறை முதல்- அமைச்சர், 13 முறை சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகளுக்கு மேல் ஒரு கட்சியின் தலைவர் என்று அடுக்கடுக்கான பெருமைகளுக்கு சொந்தக்காரர் கலைஞர்

தலையங்கம்
தினத்தந்தி
12.9.2024 (வியாழக்கிழமை)
கலைஞரின் எழுத்துகள் மக்களுக்கு சொந்தம்!

கருணாநிதி என்றாலும், அவரது எழுத்தாற்றல், பேச்சாற்றல் என்பது பெரும் புகழுக்குரியது. அவர் எழுத்துகளை எடுத்துக்கொண்டால் நாடகம், சினிமா, கதைகள், கட்டுரைகள், அரசியல் அறிக்கைகள், கடிதங்கள், கவிதைகள் என்று பல பரிணாமங்களில் ஒளிவீசுகிறது. ‘உடன்பிறப்பே..’ என்று அழைத்து அவர் எழுதிய கடிதங்களெல்லாம் தி.மு.க தொண்டர்களின் நாடி நரம்புகளில் எல்லாம் ஊடுருவும். திருக்குறளுக்கு அவர் எழுதிய ‘குறளோவியம்’, அய்யன் வள்ளுவரை பாமர மக்களும் படித்து இன்புறவைத்தது. தேனலைகள், சங்கத்தமிழ், திருக்குறள் கலைஞர் உரை, தொல்காப்பிய பூங்கா போன்ற அவர் எழுதிய உரை நூல்கள் எல்லோருடைய, குறிப்பாக தமிழ் அறிஞர்களின் போற்றுதலை பெற்றுள்ளது.

மக்களுக்காக பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்து சிறை சென்ற நிலையில், அங்குதான் அவரது எழுத்து பணி வேகம் எடுத்தது. சிறையில் இருக்கும் போது அவர் எழுதிய கவிவசனங்கள் தொகுக்கப்பட்டு, ‘கவிதையல்ல’, ‘முத்தாரம்’ என்ற பெயரில் நூலாக வந்துள்ளது. தொண்டர்களுக்கு அவர் எழுதிய கடிதங்கள் 54 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவரது வாழ்க்கை வரலாறை அவரே ‘நெஞ்சுக்கு நீதி’ என்ற பெயரில் எழுதிய வரலாற்று நூல் 6 தொகுதிகளாக பிரசுரிக்கப்பட்டன. இது போல, 1957 முதல் 2018-ம் ஆண்டு வரை சட்டமன்றத்தில் அவர் முதல்- அமைச்சராக, அமைச்சராக, எதிர்க்கட்சி தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய உரைகள் இன்றும், எதிர்காலத்திலும் ஆட்சியில் இருப்பவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் வழிகாட்டும் வகையில் 12 தொகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவருடைய படைப்புகளையெல்லாம் எடுத்துக்கொண்டால் 178 நூல்களாக வெளிவந்திருக்கிறது. அவரது முதல் கட்டுரை அவருடைய 18-வது வயதில் அண்ணாவின் ‘திராவிட நாடு’ இதழில் ‘இளம்புலி’ என்ற பெயரில் வெளியானது. 23 வயதில் ‘ராஜகுமாரி’ என்ற படத்தில் தொடங்கி மொத்தம் 75 திரைப்படங்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். அவருடைய படைப்புகளின் பக்கங்களை கணக்கிட்டால் 7 லட்சம் பக்கங்களுக்கு மேல் வருகிறது. ஒரு தனி மனிதனால் இவ்வளவு பக்கங்களை எப்படி எழுத முடிந்தது? என்பது தான் எல்லோருடைய வியப்பாகும். கலைஞரின் பேருழைப்பால் விளைந்த நற்கனிகளான அவர் எழுதிய நூல்கள் அனைத்தும் நாட்டின் கடைக்கோடி தமிழனுக்கும் சொந்தம் என்று கூறும் வகையில், இன்றைக்கு நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது.

கலைஞரின் படைப்புகளுக்கு முழு உரிமையுடையவரான அவரது துணைவி ராஜாத்தி அம்மாள் ஒப்புதல் வழங்கியுள்ளார். மேலும், கலைஞரின் நூல்களை நாட்டுடைமை ஆக்குவதற்கு தனக்கு நூலுரிமைத் தொகை எதுவும் தேவையில்லை என்று பெருந்தன்மையுடன் தெரிவித்துள்ளார். இனி கலைஞர் அவர்களின் படைப்புகளான 178 நூல்களையும் யாரும் அச்சிட்டுக்கொள்ளலாம்.

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் அருள் அவ்வை சொன்னது போல, “செங்கோல் ஏந்திய செம்மொழி சிகரம் முத்தமிழறிஞர் கலைஞர் நூல்களை நூலுரிமைத் தொகையின்றி நாட்டுடைமை ஆக்கியது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் தமிழ் திருப்பணியாகும்.”

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்குப் பகுதி சார்பில் கழக செயல் வீரர்கள் கூட்டம் பகுதி செயலாளர் அரிமா சு.சேகர் எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தொகுதி மேற்பார்வையாளர் பாலவாக்கம் விஸ்வநாதன் ஆகியோர் ஆலோசனை வழங்கி பேசினர். இக்கூட்டத்தில் வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி., வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி., மகேஸ்வரி முருகவேல் எம்.சி., பகுதி நிர்வாகிகள் சி.பழனி, எம்.ஏ.சங்கர், சே.மைதிலி, நா.டில்லிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டக் கழகச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், ஜி.பி.எஸ். பாலசதீஷ், எஸ்.முருகவேல், கே.என். தாமோதரன், த.பார்த்திபன், தே.கோபி, க.பாரதிதாசன், வி.சக்திவேல் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

தாம்பரம் மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகளுக்கு

பாதாள சாக்கடை திட்டம் கலந்தாய்வுக் கூட்டம்!

மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் தலைமையில் பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ பங்கேற்பு!

தாம்பரம், செப்.13 தாம்பரம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் தற்போது பொதுமக்கள் செயல்பாட்டில் உள்ளன தாம்பரம் மாநகராட்சியில் அருகில் உள்ள ஊராட்சிகள் பேரூராட்சிகள் இணைக்கப்பட உள்ளன புதியதாக அகரம் தென் மதுரை பக்கம் ஒட்டியம்பாக்கம் பெரும்பாக்கம் வேங்கைவாசல் மேடவாக்கம் நன்மங்கலம் கோயிலும் சேரி திரிசூலம் கவுல் பஜார் பொழிச்சலூர் முடிச்சூர் திருவஞ்சேரி சித்தாலப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளும் தாம்பரம் மாநகராட்சி உடன் இணைத்து விரிவாக்க செய்யப்பட உள்ளன விரிவாக்க செய்யப்படவு பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தை கொண்டு வருவது குறித்தும் ஏற்கனவே மாநகராட்சியில் உள்ள பகுதிகளான செம்பாக்கம் சிட்லபாக்கம் மாடம்பாக்கம் பெருங்களத்தூர் பீர்க்கங்கரணை திருநீர்மலை ஆகிய பேரூராட்சிகளுக்கும் மாதாள சாக்கடை அமைப்பது குறித்தும் கூட்டத்தில் கலைந்த ஆய்வு செய்யப்பட்டது மாவட்ட ஆட்சியர் அருண் ராஜ் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சா. பாலச்சந்தர் மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் புதியதாக பாதாள சாக்கடை அமைக்கும் பகுதிகளில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பணிகள் முடிந்த பகுதியில் உடனடியாக சாலைகளை தற்காலிக சாலைகள் அமைத்து புதுப்பித்திட வேண்டும் என்றும் பாதாள சாக்கடை ஊந்து நிலையங்களைஎரியை ஒட்டிய பகுதிகளில் மேற்கொள்ளக்கூடாது என்று வருங்காலங்களில் பாதிப்பு ஏற்படாதுவாறு கூர்ந்து நிலையங்களை அமைக்க வேண்டும் என்றும் பாதாள சாக்கடை குழாய்கள் புதைக்கும் போது குடிநீர் குழாய்களுக்கு அடியில் அல்லது மேலே போட்டு குடிநீர் குழாய்க்கு பாதிப்பு ஏற்படாது அமைக்க வேண்டும் என்றும் சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் அதிகாரிகளிடத்தில் கேட்டுக்கொண்டார் இக்கூட்டத்தில் மேலும் பல்வேறு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன அப்பொழுது மாநகராட்சியின் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்

கொரியர் பி.முருகன் தலைமை ! வ.பெ.சுரேஷ் முன்னிலை !

52 (அ) வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் !

ஆர்.டி.சேகர் சிறப்புரை ! கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி, என்.நவீன் பங்கேற்பு !

சென்னை, செப்.13 சென்னை வடக்கு மாவட்டம்,இராயபுரம் மேற்கு பகுதி 52(அ) வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (13.09.2024 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் ஷபி திருமண மண்டபம், அஜிஸ் முகம்மது தெருவில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் கொரியர் பி.முருகன் தலைமை வகிக்கிறார். இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், முன்னிலை வகிக்கிறார்.

நா.சண்முகம், எம்.கே.இஸ்மாயில், எம்.எம்.டி.சலாவுதீன், நா.கஜேந்திரன், கழக க.பாபு, ஏ.அன்வர், சி.சுலோச்சனம்மாள், கே.லோகேஷ், டி.சந்திரன்,பி. அன்சர், என்.பாபு,இளங்கோ, நந்தகுமார், போட்டோ மொய்தீன், பாஸ்கர், புரட்சி, வண்ணை டி.ராஜேந்திரன், எஸ்.ஜெயராமன், எம்.மனோகர், எஸ்.உதயா, பி.விஜயகுமார், எஸ்.குமார்,ஏ.காஜா உசேன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, என்.நவீன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தா.இளையஅருணா, ந.மனோகரன், மு.கோபி, எஸ்.ஆர்.கமலகண்ணன், க.நாகம்மை, ஆர்.வெற்றிவீரன், வி.தயாளன்,தீதாசுரேஷ் எம்.சி,கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன்,எஸ்.சுரேஷ், ஆர்.எ.ரஷீத், ஒய்.எம்.டி.இஸ்மாயில், ஏ.கே.சர்தார், எம்.கே.கமாலுதீன், கிருஷ்ண மூர்த்தி, ஸ்டீல் பாலா,எம்.தாமோதரன், கௌஸ்பாஷா, ஜிந்தா, டில்லிபாபு, யுவராஜ், அ.மலர், தனசேகர், இளங்கோவன், லூர்து மார்டின்,கயல் விழி விஜயகுமார், ஆ.வேளாங்கண்ணி, பன்னீர் செல்வம், வினோத்குமார், இளங்கோவன், மோசஸ், எல்சாத்மொய்தீன், ஆசாத்,நூர் முஹம்மது, தாவூத், செல்லப்பா, மணி,லோகநாதன், தன்ராஜ்,கோட்டி மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

எம்.முருகன்,ஏ.ரோமி, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஜெ.கௌரீஸ்வரன் தலைமை! வ.பெ.சுரேஷ் முன்னிலை! இராயபுரம் மேற்குப் பகுதி

53 ‘அ’ வட்ட பொது உறுப்பினர்கள் - செயல்வீரர்கள் கூட்டம்!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, செப். 13- சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்குப் பகுதி 53 ‘அ’ வட்டக் கழகம் சார்பில்பொது உறுப்பினர்கள் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (13.9.2024-வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில் மாநகராட்சி சமுதாயக் கூடம், காத்படா மெயின் ரோட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் ஜெ. கௌரீஸ்வரன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் வ.பெ. கரோஷ், இரா.செந்தில்குமார் மற்றும் மு.கோபி, எஸ்.ஆர். கமலக்கண்ணன், க. நாகம்மை, பா. வேளாங்கன்னி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இ.மதிவாணன், ஏ.பாஸ்கர், பி.ஆகி பிரகாஷ், ஆர். வாசு, இ. ரகு, கே.கோபி, டபுள்யூ.ஏ. சார்லஸ், க. ஜெயசீலன், எம். செந்தில்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் என். நவீன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தா. இளைய கருணா ந. மனோகரன், பி.டி. பாண்டிச் செல்வம், நா. சண்முகம், வே. சிவக்குமார், கி.இராசநேந்திரன், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ். திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், ஏ. அன்வர், எஸ். ரமேஷ்,

வே.சு.சத்தியநாராயணன், ஏ.ரமேஷ் பாபு, க. கோவிந்தசாமி, லியோ டி. சுரேஷ், ஆர். வி. லட்சுமிவேலு, ஜெ.கே. நாதன், கார்த்திக் செங்குட்டுவன், பி. சோம சுந்தர மூர்த்தி லயோலா கே. மதன், மோ. ரவிக்குமார், எஸ். சந்திரன், ஜி.எஸ். முருகன், கே. முனுசாமி, என். சம்பத் குமார், ஆர். இம்ரான், தீ. சரவணமூர்த்தி, ந.ம.மகேஷ்குமார், எஸ்.எம். சாமி, பொ. அழகேசன், கோ. அண்ணாதுரை, எஸ். யுவராஜ், இரா. பொன்முடி, எம். பாலாஜி அத்தோ பி. முனுசாமி, வி. குமார், ஆர்.டி.ஜெய் சங்கர்

ஏ.சாந்தகுமார், எஸ். செல்வநாதன், எம். விஜயசண்முகம், ஜெ.தரணிதரன், எல்.ஜி. பார்த்திபன், பா. சக்தி தாசன், ஆர். பிருந்தா, ஆர். சரசா, சி. தமிழ் தென்றல், பி.சுரேகா, பி. அனிதா, கே. காதர், டி. மோகனா, ஷீலாசேகர், ஐ. ராஜேஷ், எஸ்.எம். தேவேந்திரன், என். அரெக்ஸ்நாதன், ஆர்.சி. முருகன், பாபு (எ) ஏ. சீனிவாசன் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

ஏ.சக்திவேல் நன்றி கூறுகிறார்.

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி

110 வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம்!

மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நா.எழிலன், வினோத் வேலாயுதம் சிறப்புரை!

வட்டச் செயலாளர் கே. எஸ். தினேஷ் பிரபு வேண்டுகோள்!

சென்னை, செப். 13- சென்னை மேற்கு மாவட்ட கழக சார்பில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக பொதுக்கூட்டத்தில் அறிவிப்பின்படி சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110 வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம இன்று 13-9-2024 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் நுங்கம்பாக்கம், குட்டி தெருவில் அமைந்துள்ள ராமானுஜா கன்வென்ஷன் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், சிறப்புரையாற்றுகிறார்.

ஆகவே கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாகிகள்,தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110 வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் BLA2,BLC மற்றும் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் கழகத் தலைவர் பாச தளபதி அவர்களின் ஆணையின்படியும் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி 99 வது வட்டம் பிரிக்கிலின் சாலை ஹோட்டல் அக்சயாவில் 11.9.2024 புதன்கிழமை மாலை 7 மணி அளவில் வட்டக் கழக பொதுஉறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பகுதி செயலாளர் சொ வேலு முன்னிலை வகித்து ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட கழக பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் BLA2 மற்றும் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை! துறைமுகம் கிழக்கு

60 (அ) வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் அறிக்கை!

சென்னை, செப். 13 - துறைமுகம் கிழக்குப் பகுதி, 60 (அ) வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்குப் பகுதி, 60 (அ) வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (13.9.2024 வெள்ளிக்கிழமை) மாலை 7 மணிக்கு, எண். 19, மண்ணடி தெருவில் நடைபெறுகிறது.

எனது (வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன்) தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் எஸ்.இராஜசேகர் முன்னிலை வகிக்கிறார்.

ஜஸீலுதீன், எம்.ஜெயவேல், எஸ்.முருகம்மாள், யு.நாசர், ஆர்.அன்பு, க.கதிரவன், சி. ஆர்.பிரபு, முஹம்மது, முக்தார், ஆர்.ரவி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் தொகுதியின் தலைமையிடப் பார்வையாளர் கா.பிரபு, மாவட்டப் பொருளாளர் இசட்.ஆசாத், எஸ்.முரளி, ஜி.மகாதேவன், என்.பி.எம்.சேக் அப்துல்லா, வெ.பரிமளம், எம்.இ.கனி, பி.விஜயகுமார், பா.பிரதீப் குமார், பகுதி நிர்வாகிகள் ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.பா.ஜெயராமன், எஸ்.எம்.ஹாஜி, எஸ்.மணிமேகலை, ஆர்.அன்னக்கிளி, கே.ஸ்ரீதர், எஸ்.இம்ரான், ஆர். ராஜேஷ், கார்த்திகா, எஸ். ரேவதி, வி.வினோத், முஸ்தபா, எம்.அருண்குமார், பி. மோகன்ரூபன், முனுசாமி, என்.கமல், லயன் மாரியப்பன், சி.நாகப்பன், பி.அரிவிந்த் தாட்சன், ஏ.பிரபா, கே.ஸ்ரீதர், ஜி.சசிகுமார், எஸ்.சுகன்யா, பி.பானுசங்கரி, கே.யுவராஜ், பாரிஸ் ரவி, எஸ்.ரஜீப்மீராசா உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

த.பன்னீர்செல்வம் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் கழகச் செயல்வீரர்கள், நிர்வாகிகள், முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் தா.கிறிஸ்டி (எ) அன்பரசு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.மோதிலால் ஆகியோர் ஏற்பாட்டில் தங்கனூரில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்கள் உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் குருதாஸ், ப.சிட்டிபாபு, எஸ்.மகாலிங்கம், பொ.பாண்டியன், மகாலட்சுமி மோதிலால், கே.பாஸ்கரன், லட்சுமணன், சித்ரா ரமேஷ், அ.ஆனந்த், நடராஜன், தேவேந்திரன், டில்லிபாபு, சௌகார்பாண்டியன், சிவசங்கரிஉதயகுமார், ம.கிரண், வி.எஸ்.நேதாஜி, ஆர்.மனோகரன், லோட்டஸ் கோபி, எம்.எஸ்.அருண், வி.எஸ்.சதீஷ், டி.ஆர்.திலீபன், எம்.எம்.லிங்கேஷ்குமார், கு.பிரபாகரன், எம்.எழில், இரா.தனசேகர், எல்.மோகன், ஜெ.கருணாநிதி, பொன்.ராஜாசீங், உள்பட பலர் உள்ளனர்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை!

துறைமுகம் கிழக்கு 55 (அ) வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி அறிக்கை!

சென்னை, செப். 13 - துறைமுகம் கிழக்குப் பகுதி, 55 (அ) வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்குப் பகுதி, 55 (அ) வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் (14.9.2024 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, எண். 94, போர்ச்சுகீஸ் தெரு, ஜெயின் பவன் (சர்ச்) எதிரில் நடைபெறுகிறது.

எனது (வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி) தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் எஸ்.இராஜசேகர் முன்னிலை வகிக்கிறார்.

எஸ்.தேவன், வி.கலைவாணன், பி.அம்மு, டி.ஆனந்த ராஜி, ஜி.எஸ்.மோகன்ராஜ், எம்.கார்த்திக், டி.கிருஷ்ணன், என்.செந்தில்குமார், என்.வி. கிரி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

துறைமுகம் தொகுதி பார்வையாளர் கா.பிரபு, மாமன்ற உறுப்பினர் எல்.நவீன், பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, ஜி. மகாதேவன், இசட்.ஆசாத், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, எம்.இ. கனி, பி.விஜயகுமார், பா.பிரதீப்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.பா.ஜெயராமன், சு.கதிர், பி.செந்தில், கே. பாலாஜி, கே.அம்சா, வி. துர்கா, எஸ்.பாபு, வி.மகேஷ், சு.ஜெகன், ஆர்.சிவகுமார், டி.கண்ணதாசன், கே.மணிமாறன், எச்.தமீம்பாட்சா, டி. வினோத், எச்.அரி, ஜெ. பென்னி, எஸ்.வேலு, எல்.அழகுவேல், ஆர்.பக்தவச்சலம், ராஜசேகர், இ.சண்முகம், ஆர்.நாகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர் கே.தம்பிதுரை (எ) சமி நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் கழகச் செயல்வீரர்கள், நிர்வாகிகள், முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி எழும்பூர் தெற்கு பகுதி 61 வது வட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் வட்ட கழக செயலாளர் எஸ். டால்பின் அரி தலைமையில் நடைபெற்றது. இதில் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி. சுதாகர் சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ. ஏகப்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், பகுதி அவை தலைவர் எஸ். ரசூல், டி.வி. வேலு, அன்னபூரணி, ஜெகதீசன் மற்றும் வெற்றிக்குமார்,டி.வின்சென்ட்,ரா.குமார்,சி, பூங்கொடி,சி.சீனிவாசன் பார்த்திபன். த. இசக்கியில் இன்பநாதன், எம்.ராமசந்திரன், ஜா. இஸ்மாயில், வி. ஆர் சாந்தகுமார், ஏ. கே. ரஃபிக், மதுரைமீனாட்சி, செல்வி, குமார் மதுரம் கோ. சந்தோஷ், செந்தில் ஜி.சுந்தர்ராஜ், ஆர். மணிகண்டன் ஆகாஷ் விஜய், வினோத் குமார், ஜே.தீனன், என். ராஜேஷ்,வாசிம் அக்ரம்,யுவராஜ் பி.எல்.ஏ., பி.எல்.சி. நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.